# கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர்.சி.பூரணசந்திரன்,
எம்.சி.ஏ, எம்.ஃபில்., பி.எச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை - 600006.

பெறுநர்

1. **பதிவாளர்,**
   தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், காரப்பாக்கம்,
   சென்னை - 600097.
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் அனைத்து மண்டலங்கள்.
   (சுயநிதி கலை & அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் மட்டும்).

ந.க.எண்: 42065/எல்/2021 நாள் : .12.2021

அய்யா / அம்மையீர்,

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை - ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்க கல்லூரிகளுக்கான இணையதளம் 13.12.2021 அன்று திறக்கப்பட்டுள்ளது - உரிய காலக்கெடுவிற்குள் விண்ணப்பங்களை புதுப்பித்தல் செய்ய கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தக் கோருதல் - தொடர்பாக.

பார்வை: சென்னை - 05, ஆதிதிராவிடர் நல ஆணையரகம் கடித **எண்.எல்1/35459/2021-2** நாள்: **14.12.2021.**

*********

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் **2021-22-ஆம்** கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் விண்ணப்பிப்பதற்கு ஏதுவாக கல்லூரிகளுக்கான இணையதளம் 13.12.2021 அன்று முதல் திறக்கப்பட்டு, புதுப்பித்தல் இன மாணாக்கர்கள் சார்பான கேட்புகளை பதிவேற்றம் செய்ய இறுதி நாள் 31.12.2021 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுப்பித்தல் இன மாணாக்கர்களுக்கு, விடுதி சார்பான விவரங்கள், சேமிப்புக் கணக்கு விவரங்கள் மற்றும் ஆதார் எண் விவரங்கள் சரியாக உள்ளதா என்பதைக் கல்வி நிறுவனங்கள் கூர்ந்து செய்து, மாற்றங்கள் ஏதுமிருப்பின் அதனை கல்வி நிறுவனங்கள் சரி செய்ய வேண்டுமெனவும் பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் புதுப்பித்தல் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த நாளான 31.12.02021-க்குள் தகுதியுள்ள விண்ணப்பங்கள் புதுப்பித்தல் செய்யப்படவில்லை எனில், அதற்கான முழு பொறுப்பினையும் கல்வி நிறுவனமே ஏற்றுக் கொள்ள நேரிடும் என்றும், மாணாக்கர்கள் சார்பான கல்வி உதவித் தொகையினை கல்வி நிறுவனமே ஈடுசெய்து கொள்ள வேண்டும் எனவும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனை மிகவும் அவசரம் எனக் கருதி உரிய சுற்றறிக்கையினை சார்ந்த சுயநிதிக் கல்வி நிறுவங்களுக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

22/12/21